**63 சமணர்களைக் கழுவில் ஏற்றியப் படலம்**

சவுந்தரபாண்டியனின்மனைவிமங்கையர்க்கரசியும்மந்திரிகுலசிறை யாரும் ஞானசம்பந்தரிடம் மன்னனின் வேட்கை நோயையும் கூனையும் போக்கியதைப் போல்பாண்டிய நாட்டில் தங்கியுள்ள சமணத்தையும் அழிக்க வேண்டும் என்று வேண்டினர். ஞானசம்பந்தர் ஐயனின் விருப்பத்தை அறிய எண்ணம் கொண்டு மந்திரியையும், அரசியையும் உடன் அழைத்துக் கொண்டு திருக்கோயில் சென்றார். பொற்றாமரைக் குளத்தில் நீராடி ஐயனிடம் தம் எண்ணத்தைக் கூறி தமக்கு அருளுமாறு வேண்டினார்கள்.

அவர்களுடைய விருப்பமே தமது விருப்பம் என்றும், சமணர்களுடன் வாதத்தில் வெற்றி அவர்கள் பக்கமே என்று ஐயன் கூறியருளினார். மூவரும் மன்னனிடம் சமணருடன் வாதம் செய்ய அனுமதிப் பெற்ற பின்னர், வாத செய்யக் காத்திருந்தனர்.

சமணரின் மனைவிமார்கள் தாங்கள் தீயகனவுகள் கண்டதாகவும், அவை கெட்ட சகுனமானதால் வாதத்திற்கு செல்லவேண்டாம் என தமது கணவர்களைத் தடுத்தனர். மனைவியரது வேண்டுகோளை நிராகரித்து, ஞான சம்பந்தருடன் வாதம் செய்ய அரசரவை அடைந்தார்கள்.

ஞானசம்பந்தரிடம்சமணர்கள்அவருடையமந்திரத்தைஒருஏட்டிலும், சைவர்களும் தங்கள்மந்திரத்தை ஒரு ஏட்டில் எழுதி தீயிலிட்டால் எது கருகாமல் இருக்கிறதோ, அது வென்றதாகும்என்றார்கள். மேலும் சிவனது தலமாகிய மதுரையில் இந்த வாதம் நடந்தால், சிவன் நடுநிலைதவறி சைவர்கள் சார்பில் நின்று சமணர்களுக்கு கேடு செய்வான். ஆதலினால் மதுரைக்குவெளியே சென்று வாதம் புரியலாம் என்றனர். எனவே அனைவரும் மதுரைக்கு வெளியே வாதம்செய்ய சென்றனர்.

கீழ் திசையில் ஏழு குழி செய்து நெருப்பை மூட்டினார்கள். எண்ணாயிரம் சமணர்களும்ஒவ்வொருவரும் மந்திரத்தை ஏட்டில எழுதி தீயிலிட்டனர் .அவை யாவும் கருகின. சமணர்கள் மனம் கலங்கினார்கள். ஞானசம்பந்தர் தமது ஏட்டுக்கட்டிலிருந்து "போகமார்த்தபூண்முலையாள்" என தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்து தீயிலிட்டார். அது பச்சையாகவேஇருந்தது. அனைவரும் மகிழ்ந்தனர். அந்த இடத்திற்கு அன்று முதல் சம்பந்த நத்தம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. தீயிலிட்ட ஏட்டை மீண்டும் எடுத்து திருமுறையில் சேர்த்தனர். தோல்வியால் கோபம் கொண்டனர் சமணர்கள்.

ஞானசம்பந்தரின் ஏடு அக்கினியால் கருகாது மீண்டதைக்கண்டு, திருப்தி அடையாத சமணர்கள் திரும்பவும் ஏடுகளை வைகை-யாற்றில் விட்டு, எந்த ஏடு நீரை எதிர்த்து வருகிறதோஅந்த ஏடே

வெற்றி பெற்றதாகக் கொள்வோம் என்றனர். தோல்வி அடைந்தவர்கள் வெற்றிப்பெற்றவர்க்கும் அடிமை என்ற முடிவிற்கும் வந்தனர். அதற்கு ஞானசம்பந்தர் தங்களுக்குகுற்றேவல் புரிய ஆட்கள் தேவையில்லை எனவும் தோற்றவர்கள் கழுமுனையில் ஏற வேண்டும்என்றார். ஊழ் வினையால் சமணர்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

சமணர்கள்தம்ஓலையைநீரில்இட்டார்கள். ஓலையானது நீரில் போக்கில் சென்றது .ஞானசம்பந்தர் "வாழ்க அந்தணர்கள்" என்று ஓலை எழுதி வேதம் கூறும் மெய் பொருள் சிவபெருமான் என்பது உண்மையானால் வெள்ளத்தை எதிர்த்து செல்க என்று கூறி நீரில் விட்ட ஓலை நீரில் எதிர்த்திச் சென்றது. சிவனடியார்கள் அனைவரும் மகிழ்ந்தனர். போட்டியின் விதிப்படி ஞானசம்பந்தரே வென்றார். ஐயனின் அருமை பெருமைகளை மன்னன் உணர்ந்தான். தோல்வியடைந்த சமணர்கள் தானே கழுவிலேறினர். இதர சமணர்கள் தம்மதம் விட்டுசைவராயினர்.

ஆற்றைஎதிர்த்துச்சென்றஏடுமறைந்ததும்முதியவர்வேடமேற்றுசிவபெருமான்அந்தஏட்டைஎடுத்துஞானசம்பந்தரிடம்சேர்த்தார்.
அந்த இடத்தில் பாண்டியன் திருவேடகம் என்ற பதிஉண்டாக்கி ஞானசம்பந்தருடன் ஓராண்டு தங்கியிருந்து, பின் தன் மனைவியுடனும்மந்திரிகளுடன் மதுரை மாநகர் அடைந்தான்.

**பல்லவி**

சம்பந்தருடன் கோபித்து சமணர்கள் போட்டியிட்டு
தன் மந்திர ஏடுகள் மட்டும் தீயில் கருகி தோற்றனர்

**அனுபல்லவி**

வம்புக்காக மீண்டும் அவர்கள் வைகையை ஆற்றில் ஓலையிட்டு
எதிர்த்துச் செல்லாஓலையினர் கழுவிலேற்றப் படுவர் என்றார்

**சரணம்**

தோற்ற சமணர் கழுவிலேற்றப் பட்டிறக்க
சம்பந்தர் சுயம்புலிங்கத்தை தன் ஏட்டைத் தரச் சொல்ல
ஏற்ற தலமெங்கும் உன் புகழ் பாடி வீடு
பேற்றை யடைவாய் என்று ஏட்டைத் தந்தீரே